**24.06.2024**

**அ.வ.எண். 132/2022**

**<u>வா.சா.1 எபிநேசன் அவர்களின் குறுக்கு விசாரணை</u>**

**1. 26.08.2020** அன்று நான் மின் இணைப்பு கோரி மனு கொடுத்தேன். நான் நேரடியாகவும், கணினி வழியாகவும் மனு கொடுத்தேன். அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு உரிமையான சொத்து. எனது தகப்பனார் அதை பூர்வீகமாக அனுபவித்து வந்தார். தாவா சொத்து கிராமநத்தம் என்றால் உண்மைதான். **1994**ம் வருடம் கிராமநத்தம் திட்டத்தில் எனது பெயரில் அல்லது எனது தகப்பனார் பெயரிலோ தாவா சொத்திற்கான பட்டா வழங்கவில்லை என்றால் சரிதான். படிப்பறிவு இல்லாததால் எப்படி பட்டா பெறுவது என்று தெரியவில்லை. இன்றைய தேதியில் தாவா சொத்தின் வருவாய் ஆவணங்களில் அது கிராமநத்தம் புறம்போக்கு என்றுதான் கண்டுள்ளது என்றால் சரிதான்.

**2**. மின் இணைப்பு பெறுவதற்கு அந்த சொத்தின் உரிமையாளர் பெயர் வருவாய் ஆவணங்களில் பதியப்பட்டிருக்க வேண்டும் என்று ஒரு விதிமுறை உள்ளதென்றால் சரிதான். மின் இணைப்பு பெறுவதற்கு வருவாய்துறையிலிருந்து தடையில்லா சான்று பெற்று தரவேண்டும் என்பது விதிமுறை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு தடையில்லா சான்று பெற்று மின்வாரியத்திடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனவே அரசு கிராமநத்தம் புறம்போக்கு நிலத்திற்கு மின் இணைப்பு கோருவதற்கு

எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் அதில்தான் வசித்து வருகிறேன். எனவே நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.